**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No. 214/2019**

**15.10.2025**

**P.W.1- சின்னன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2, 5, 7, 8, 10, 11வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் 1-3 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சொத்து விவரம் தெரியும். எனக்கு எனது பங்கில் ஓட்டு வீடு உள்ளது. 5ம் பிரதிவாதி காந்தி அவரது பங்கில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நீண்ட நாட்களாக வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். ஆனால் பாகப்பிரிவினை செய்யவில்லை. பாகப்பிரிவினை செய்து தனித்தனியாக வீடுகட்டி, குடியிருந்துவிட்டு தற்போது பாகப்பிரிவினை ஆகவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஊர் பொது கிணறு உள்ளது. மேற்படி கிணறு காலனி மக்களுக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்தில் கோயில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோயில் எங்களது சொந்த கோயில் ஆகும். எனது வீட்டிற்கு எனது தயார் பெயரில் மின்இணைப்பு பெற்றுள்ளோம். எனது தாயார் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அதற்கு 10 வருடங்களுக்கு முன்பு மின்இணைப்பு பெற்றுவிட்டோம். 5ம் பிரதிவாதியும் நீண்ட நாட்களுக்கு முன்பு மின்இணைப்பு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். தனித்தனியாக வீட்டு வரிரசிது உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் பெரியகருப்பத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1வது இலக்க சொத்தில் 2 சென்டை சாமியப்பனுக்கு 21.06.1955ம் தேதி பெரியகருப்பத்தேவர் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி இடத்தில் சாமியப்பன் வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி சாமியப்பன் வீடு, கிணறு, எனது வீடு, பிரதிவாதிகள் வீடு, கோயில் ஆகியவைகளை பற்றி ஏன் வழக்கில் கூறவில்லை என்றால் பாகப்பிரிவினை வழக்கு போட்டுள்ளேன். பெரியகருப்பத்தேவருக்கு அம்மாசித்தேவர், மொக்கத்துரைத்தேவர், ராசுத்தேவர் என 3 மகன்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கோயிலில் சாமி சிலைகள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி 3 மகன்கள் தாவா சொத்தை 3

பிரிவாக வாக்கரலாக பிரித்துக்கொண்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பட்டா கூட்டாக உள்ளது என்றால் சரிதான். அவரவர் இடத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் அவர்களின் பங்கு நிலத்தை பொறுத்து லோன் வாங்க தனிப்பட்டா தேவைப்பட்டதால் வாதிகளாகிய எங்களளை அணுகி வாக்கரால் பிரிவினைப்படி பட்டா பிரித்துக்கொள்வோம் என சொன்னதற்கு நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி தாவா சொத்தில் அவரது பங்கில் வீடு கட்ட ஏற்பாடு செய்தார் என்றால் சரியல்ல. நான் வீடு கட்டவிடாமல் தடுத்ததால் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நிரந்தரமாக வீடு கட்டுவதை தடுப்பதற்காக பாகம் பிரிக்கவில்லை என பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கூட்டாக பட்டா இருப்பதை பயன்படுத்தி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.15 17:39:41 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.